THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455.
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
Postal Reg.No: CB/123/2018-20.



# கேபிஆர் கல்லூரியில் ரெட்ஹாட் அகாடமியின் மையம்




தேர்ச்சிபெற்ற மாணவர்களுடன் கல்லூரித் தலைவர் கே.பி.ராமசாமி, ரெட்ஹாட் அகாதமியின் இந்தியப் பிரிவுத் தலைவர் ரமேஷ் ராமன், மண்டலத் தலைவர் ஜியோ ஜோசப் மற்றும் வெக்ட்ரா டெக்னோ சாப்ட் நிறுவன இயக்குநர் ரஞ்சித் சென் குப்தா, கல்லூரி முதல்வர் பொம்மண்ண ராஜா ஆகியோர்.

தி கோவை மெயில்

ரெட்ஹாட் எனப்படும் பன்னாட்டு கணினி நிறுவனம், கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் டி3 மாடல் எனப்படும் சர்வதேச ரெட்ஹாட் சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி கல்லூரியின் கணினி அறிவியல் துறை மாணவர்களுக்கு கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதற்கென சிறப்புப் பயிற்சிபெற்ற கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் வெக்ட்ரா டெக்னோ சாப்ட் என்ற நிறுவனத்தின் பயிற்சியாளர்களும் மாணவர்களை வழிநடத்தினர்.

இந்த ரெட்ஹாட் அகாதமியின் மையத் துவக்க விழாவும், இத்தேர்வில் தேர்ச்சிபெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவும் ஒரே நிகழ்வாக நடைபெற்றது. கல்லூரித் தலைவர் கே.பி.ராமசாமி, ரெட்ஹாட் அகாதமியின் இந்தியப் பிரிவுத் தலைவர் ரமேஷ் ராமன், இதன் மண்டலத் தலைவர் ஜியோ ஜோசப் மற்றும் வெக்ட்ரா டெக்னோ சாப்ட் நிறுவன இயக்குநர் ரஞ்சித் சென் குப்தா, கல்லூரிச் செயல் அதிகாரி நடராஜன், முதல்வர் பொம்மண்ண ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் ரெட்ஹாட் நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் மாணவர்கள் பலர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்தத் தேர்வானது ஒரு கல்லூரியிலேயே பயிற்சி அளித்து, அக்கல்லூரியிலேயே தேர்வு நடத்துவது நாட்டில் இதுவே முதன்முறை. இந்தச் சான்றிதழ், மாணவர்களுக்கு ஐ.டி. நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உதவியாக இருக்கும்.